# தூதன்

தூதன்-26 ஜனவரி 2017 தூது-1



"கர்த்தரை நம்புகிறவனோ உயர்ந்த
அடைக்கலத்திலே வைக்கப்படுவான்"
நீதிமொழிகள் 29:25

**தென் இந்தியத் திருச்சபை**
**தமிழ் சபை - துபாய்**

Private Circulation only

# தென் இந்தியத் திருச்சபை
# தமிழ் சபை - துபாய்


| | |
|---|---|
| சபை போதகர் மடல் | 02 |
| ஆயரம்மா மடல் | 05 |
| உதவி போதகர் மடல் | 07 |
| உதவி ஆயரம்மா மடல் | 09 |
| செயலர் மடல் | 11 |
| ஆராதனை பாடல்கள் | 13 |
| புத்தாண்டு | 14 |
| நீங்கள் கிறிஸ்தவரா... | 15 |
| மான் | 16 |
| தெரிந்த சத்தியம் தெரியாத உண்மை | 18 |
| திருச்சபை ஜெபநாள் | 20 |
| வேதவினா போட்டி | 22 |
| தெரிந்து கொள்வோம் | 24 |
| Young Reader's Column | 26 |
| Health Tips | 28 |
| Children's Corner | 30 |
| JC Annual Report 2016 | 32 |
| Super Seniors Report | 33 |
| Birthday Celebrants | 34 |
| Wedding Anniversary Celebrants | 37 |



**P.O.Box: 8785, Dubai. Ph: 04-2552065, 04-2249249(office), Mob: 050-5533645**
**Website: www. csitamilparishdubai.com, E-mail: tamilcsi@eim.ae**

# சபை போதகர் மடல்

## புதுமையின் ஆண்டவர் (Lord of Newness)

கிறிஸ்துவுக்குள் எனதருமை விசுவாசிகளே,

“இதோ, நான் சகலத்தையும் புதிதாக்குகிறேன்” (வெளி.21:5) என்று வாக்களித்து, இப்புதிய ஆண்டிலும் நம்மைக் கரம்பிடித்து வழிநடத்த ஆவலாயிருக்கும் ஆண்டவர் இயேசுபெருமானின் இனிய திருப்பெயரில் உங்கள் அனைவருக்கும் புத்தாண்டு நல்வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன். கடந்த ஆண்டின் கடினமான சூழ்நிலைகளிலும் கனிவுடன் நடத்தின அதே ஆண்டவர், இப்புதிய ஆண்டிலும் புதுமையாய் நடத்துவார் என்பதில் எவ்வித ஐயமுமில்லை. நாமும் அவரிடம் வேண்டிப்பாடுவோம்:

“புதிய சிந்தை, புதிய ஆசை புதுப்பித்தாக்கவே - அதைப்
புகழ்ந்து காக்கவே - தீய மனதை மாற்ற வாரும் தூயஆவியே”

ஐக்கிய நாடுகள் சபை (United Nations) இந்த 2017-ம் ஆண்டை “நிலையான சுற்றுலா வளர்ச்சி ஆண்டு” (Sustainable Tourism Development Year) என்று கொண்டாட அழைத்திருக்கிறது. அதன்படி நாடுகளிடையேயும், மக்களிடையேயும் இணக்கம், சகோதரத்துவம், சமாதானம், விட்டுக் கொடுத்தல், பிற பண்பாடுகள் மற்றும் நம்பிக்கைகளைப் புரிந்து வாழுதல், மனித நேயத்தைப் பேணிக்காத்தல் போன்ற தகவுகள் வளருவதற்கு இந்த அர்த்தமுள்ள சுற்றுலா அறிவு உதவி செய்யும் என்ற உயரிய எண்ணத்துடன் இந்த நோக்கம் அமைக்கப்பட்டுள்ளது. கிறிஸ்துவுடன் பயணிக்கும் இவ்வாழ்க்கையில் நாமும் நம்முடைய வீடுகளிலே, உறவுகளிலே, குடும்பங்களிலே, சபைகளிலே இந்த நல்லிணக்கத்தையும், நட்புறவையும், சமாதானத்தையும், விட்டுக்கொடுத்தலையும் வளர்க்கவும், சுயநலத்தை விடுத்து புத்தாக்கத்துடன் புதிய ஆண்டில் பயணிக்கவும் புதுமையின் ஆண்டவரின் துணையுடன் முயல்வோம்.

### புதுமையின் கடவுள் (God of Newness)

திருமறையின் கடவுள் புதுமையின் கடவுள். முதல் ஒப்பந்தமான பழைய ஏற்பாட்டில் இணக்கமான வாழ்விற்காக அவர் உருவாக்கின தோட்டத்தினின்று மனிதன் வீழ்ந்தபோதும் புதிய உடைகளை அவனுக்கு உடுத்தி, அவனது வெட்கத்தை மாற்றியவர். உடன் சகோதரனைக் கொலை செய்து, அத்தவறை உணர்ந்து, அங்கலாய்த்த மனுக்குலத்திற்கு வாழப் புதிய வழிகளைத் திறந்து, அதன்வழியே தலைமுறைகளை உருவாக்கி வழிநடத்தியவர்.

உலகமே தவறான வழியிலும், சுயஇச்சையிலும் உழன்றபோது, நீதிமான்களாய், பண்பாளர்களாய் வாழ்ந்த ஒரு தனிக்குடும்பத்தைக் காப்பாற்றி புதுவாழ்வு தந்தவர். நாடோடிகளாய்த் திரிந்த குடும்பத்தலைவனின் வம்சத்தை உருவாக்கி வளர்த்து, பேரினமாக மாற்றி, அவர்தம் அடிமைத்தன நிலையை சுதந்தரவாளியின் புதுமை நிலையாக மாற்றிப் பாலும், தேனும் ஓடுகிற நாட்டையும், வளத்தையும் வழங்கியவர். புதுமையின் இறைவனை மறந்து, பழைய சுயநல இச்சை வாழ்வுக்குப் பிறழ்ந்துபோன மனுக்குலத்தை மீண்டும் புத்தாக்கம் செய்தவர். இப்படிக் கடவுள் தம் செயல்பாட்டில் எப்போதும் புதுமையையே செய்கிறவர்; நன்மைகளையே செய்கிறவர். இழந்துபோன இஸ்ரவேலின் வளமான மாட்சிமையும், வளமான வாழ்வும் மீண்டும் கிடைக்கவேண்டுமென்று இறைமக்கள் விரும்புகையில் (ஆமோஸ் 9:12) கடவுள் புதிய செயலைச் செய்து அவர்கள் எண்ணினதற்கும் மேலாக, சிறப்பான ஒரு புதிய வாழ்வை வாக்களிக்கிறார், வழங்குகிறார் (எரே.31:31-34, ஏசாயா 65:17, 66:22). இதைப் பெற்றுக்கொள்ள மனுக்குலம் தம் பழைய பாவ, தீய, சுயநல நாட்டமுள்ள பொல்லாத வாழ்வினின்று மனந்திரும்பவும் அழைப்பு விடப்படுகிறது (எரேமியா 26:13, 31:19, யோவேல் 2:12,13). மனந்திரும்பி தம்மக்கள் தம்மை நோக்கிக் கூப்பிட்டபோது கர்த்தர் கேட்டருளி, அநேகந்தரம் விடுதலையாக்கி விட்டிருக்கிறார் என்பதை நெகேமியா, மீட்கப்பட்ட, எருசலேமுக்குத் திரும்பின இறைமக்களுடன் நினைவு கூறுகிறார் (நெகேமியா 9:28) இப்படிப்பட்ட புதுமையின் ஆண்டவர் இப்புதிய ஆண்டிலும், மனந்திரும்பி புதுவாழ்வு வாழவிழையும் அனைவரையும் விடுவித்து வாழவைக்கிறவராயிருக்கிறார்.

### புதுமையின் இறைமகன் (Son of Newness)

இயேசுகிறிஸ்துவின் வருகை ஒரு புதுமையான நிகழ்ச்சி. இறைமக்கள் எதிர்பார்த்திருந்த மேசியாவைக் காட்டிலும் தம்மையே அம்மேசியாவாக வெளிப்படுத்தி, இரங்கியும், இறங்கியும் செயல்பட்ட செயல்பாட்டின் நிறைவேறுதல் அவர்; புதுமை அவர். நியாயப்பிரமாணத்தையும், இறைவாக்குகளையும் நிறைவேற்ற வந்தது மெய்யாயினும், அதைப்பற்றிய அவரது போதனைகள் புதியன (மத்தேயு 5 முதல் 7 அதிகாரங்கள்). போதனைகள் மட்டுமல்ல, அவரது நற்கிரியைகள் அனைத்தும் புதியன, புதுவாழ்வுக்குரியன. சமுதாயத்தில் அடையாளம் தெரியாத எளியவரை, பெண்களை, தொழிலால் ஒதுக்கப்பட்டவர்களை உயர்த்திவிட்டவர், தூக்கிவிட்டவர். செருக்குற்று, ஐசுவரியத்தில் திளைத்திருந்த ஆதிக்கவர்க்கத்தினரைச் சாடியவர், மனந்திரும்ப அழைத்தவர். இச்செய்தியை அவர் தாய் மரியின் பாடலிலேயே இயேசு பிறப்பதற்கு முன்பாகவே அறியலாம் ( Mary's magnificat - லூக்கா 1:51-53). இயேசுவும் நேரடியாகவே சாடுவதையும், எச்சரிப்பதையும் காணமுடிகிறது (மத்தேயு 19:23-24).

மாய்மாலமான சுயநலவாழ்வையும் கண்டிக்கிற ஆண்டவரையும் காணமுடிகிறது (மத்தேயு 23). தம் சீடர்களுக்கும் ஒரு "புதிய கட்டளை"யை அளிக்கிறார் (யோவான் 13:34). அது தாழ்மையின் கட்டளை. தம் வாழ்வைத் தியாக பலியாகத் தருவதை "புதிய உடன்படிக்கையின்" திருவருட்சாதனங்கள் வழியே நினைப்பூட்டுகிறார் (மாற்கு 14:24).

### புதுமையின் ஆவியர் (Spirit of Newness)

பெந்தேகொஸ்தே திருநாளில் ஆண்டவர் இயேசுவின் பேரியக்கமாய் உருவான திருச்சபையில் சவுல் என்கிற கொடுங்கோலனும், பவுலாய் மாற்றம் பெற்று புதிய மானிடனாகிறார். அவரது அழுத்தமான செய்தியில் மானிடர் அனைவரும் புதிய மானிடராவதற்கு கிறிஸ்துவின் சாவுக்குள்ளாகத் திருமுழுக்காட்டப்பட்டு, அவரோடு மறுபடியும் எழுப்பப்படவேண்டும் (ரோமர் 6:4,5) என்று அறிவுறுத்துகிறார். "ஒருவர் கிறிஸ்துவுக்குள்ளிருந்தால் புதுப்படைப்பாயிருக்கிறார். பழையவைகள் ஒழிந்து போயின, எல்லாம் புதிதாயின (2 கொரி. 5:17) என்கிற புதிய மனிதனைத் தரித்துக்கொள்ள அழைக்கிறார். புதுமனிதரை மட்டுமன்றி புது உலகத்தையே படைப்பது கடவுளின் நோக்கமாகும். "புதிய வானமும் புதிய பூமியும்" நிச்சயமாய் இறைவனால் உருவாக்கப்படுகிறது. "முந்தின வானமும், முந்தின பூமியும் இனி இருப்பதில்லை" (வெளி 21:1). நாமும் புத்தாக்கத்தின் கருவிகளாய் இப்புதிய ஆண்டிலும் இறைசாட்சியை சொல்லிலும், செயலிலும் வெளிப்படுத்துவோம். ஆமென்.

இறைப்பணியில் ஆயர்,
அருள்திரு. சே.கிறிஸ்தோபர் ரத்தினசாமி.
சபை போதகர்.

## NEW ARRIVALS

"பிள்ளைகள் கர்த்தரால் வரும் சுதந்திரம்"

Master Jerry Brigin Ginesh
S/o.Mr.Ginesh Selson Mutthiah & Mrs. Priya Ginesh
22-10-2016

A. Blesso
S/o.Mr. S. A. Durai & Mrs. Asha Durai
24-11-2016

## ஞான இருதயமுள்ள பெண்கள்
## (WISE HEARTED WOMEN)

"நாங்கள் ஞான இருதயமுள்ளவர்களாகும்படி, எங்கள் நாட்களை எண்ணும் அறிவை எங்களுக்குப் போதித்தருளும்" (சங்கீதம் 90:12).

கிறிஸ்துவுக்குள் பிரியமானவர்களே,

வருஷத்தை நன்மையினால் நிரப்பி பாதைகளை நெய்யாய்ப் பொழியச் செய்கிற கர்த்தருடைய நாமத்திலே புதுவருட நல்வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்கிறேன். நாட்களை எண்ணும் அறிவே ஞான இருதயம் என்னும் வேதவாக்கின்படி ஆண்டவருடைய மேலான கிருபைகள், இரக்கங்கள், ஆசீர்வாதங்கள், வழிநடத்துதல்கள் கடந்த ஆண்டு முழுவதும் நம்முடன் இருந்ததை இருதயத்தில் நினைத்து நன்றிகளைச் செலுத்துவோம். அதேபோல, இந்த ஆண்டும் நம் அனைவருக்கும் இரக்கத்தின், பெலத்தின், கிருபையின் ஆண்டாக இருக்க கர்த்தர் அருள்புரிவாராக! நாம் இந்த ஆண்டிலும் எல்லா மக்களோடும் இணக்கமாக இருக்கக் கற்றுக்கொள்ளுவோம். கர்த்தரிடத்தில் அதிகமாக ஜெபிப்பதிலும், கர்த்தருடைய ஊழியங்களைத் திருச்சபைக்கும், சமுதாயத்திற்கும் செய்வதிலும் வளருவோம். அப்படிச் சாட்சியாக வாழ்ந்த ஞான இருதயமுள்ள பெண்களைக் குறித்து பார்க்கலாம்.

யாத்திராகமம் 35:25-29 வரையுள்ள திருமறைப்பகுதியில் பெயர் சுட்டிக்காட்டப்படாத தெய்வீகப் பெண்களைப்பற்றி பார்க்கமுடிகிறது. தேவ பிரசன்னத்தை உணர்வதற்கும், அதனால் வழிநடத்தப்படுவதற்கும் ஆசரிப்புக்கூடாரம் ஒன்று உருவாக்கப்படுகிறது. இது கர்த்தருடைய மகிமையின், நித்திய பிரசன்னத்தின் அடையாளமாக சுட்டிக்காட்டப்பட்டது (எபி.9:1-7). இந்த கூடாரத்திற்குத் தேவையான பொன், வெள்ளி மற்றும் பொருட்கள் அனைத்தையும் இஸ்ரவேலர் கொண்டுவந்து மனப்பூர்வமாய்க் கொடுத்தார்கள். இவைகளை அவர்கள் எகிப்திலிருந்து கொண்டு வந்தார்கள் (யாத்.3:22,11:1-3). அதைக்கொண்டு தேவபக்தியுள்ள ஊழியர்களாகிய பெசலயேலையும், அகோலியாபையும் அவர்களுடன் ஞானஇருதயமுள்ள அதாவது கர்த்தரால் ஞானமடைந்து அந்த வேலையைச் செய்ய எழுப்புதல் அடைந்த ஆண்களும், அவர்களோடு பெண்களும் அத்திருப்பணியில் இருந்தார்கள் (யாத்.35:22-29). குறிப்பாக பெண்களுடைய பங்காக அவர்களுடைய உழைப்பு சுட்டிக் காட்டப்படுகிறது.

“ஞான இருதயமுள்ள ஸ்திரீகள் எல்லாரும் தங்கள் கைகளினால் நூற்று, தாங்கள் இளநீல நூலையும், இரத்தாம்பர நூலையும், சிவப்பு நூலையும், மெல்லிய பஞ்சு நூலையும் கொண்டுவந்தார்கள். எந்த ஸ்திரீகளுடைய இருதயம் ஞான எழுப்புதல் அடைந்ததோ, அவர்கள் எல்லாரும் வெள்ளாட்டு மயிரைத் திரித்தார்கள்” (யாத்.35:25-26).

இந்த வசனங்களின் மூலமாக முதல் ஆலயமான ஆசரிப்புக்கூடாரம் உருவான காலத்திலிருந்து இன்று வரையிலும் பெண்கள் தங்கள் உடைமைகளையும், உழைப்பையும், தாலந்துகளையும், திறமைகளையும் முறுமுறுப்பில்லாமல் கர்த்தருக்கக் கொடுத்தார்கள். ‘போதும்’ என்று தலைவர் மோசேயால் சொல்லப்படும் வரை கர்த்தருடைய வேலைக்காக கொடுத்ததும் உழைத்ததும் நிற்கவில்லை.

“ஆசரிப்புக்கூடாரத்தின் வாசலில் கூட்டம் கூட்டமாய்க் கூடின ஸ்திரீகளின் தர்ப்பணங்களாலே, வெண்கலத் தொட்டியையும், அதின் வெண்கலப் பாதத்தையும் உண்டாக்கினான்” (யாத்.38:8).

இவ்வசனத்தின்படி பெண்கள் தியாகமாய் கொடுத்தது மாத்திரமல்ல, தங்களையே கூட்டம் கூட்டமாய் ஆலய பணிகளுக்காக அர்ப்பணித்துக் கொண்டதையும் காணமுடிந்தது. இன்றும்கூட திருச்சபையின் எழுப்புதலிலும், ஊழியங்களிலும் பெண்களின பங்கு பெரும்பங்காக இருக்கிறது. தொற்காளைப்போல தேவ பணிக்கு மாத்திரமல்ல, லீதியாளைப் போலவும் பிறருக்கும் பணிவிடை செய்யும் பாக்கியவதிகளே பெண்கள் என்பதைத் தெளிவாகப் புரிந்துகொள்ள முடிகிறது. வீட்டுப்பணிகளோடு திருச்சபைப் பணிகளையும் செய்துவரும்பெண்களின் சேவை பாராட்டத்தக்கது. மோசேயோடும், பெசலயேலோடும், அகோலியாபோடும் பெண்கள் இணைந்து தேவப்பணிகளை அன்று செய்ததுபோல, இன்றும் பெண்களாகிய நாமும் ஆண்களுடன் இணைந்து ஜெபித்து ஆலயப்பணியையும், சமூகப்பணியையும் நிறைவேற்றுவோம். ஆமென்!

“... கர்த்தருக்குப் பயப்படுகிற ஸ்திரீயே புகழப்படுவாள். அவள் கைகளின் பலனை அவளுக்குக் கொடுங்கள், அவளுடைய செய்கைகள் வாசல்களில் அவளைப் புகழக்கடவது”.
நீதிமொழிகள் 31:30-31

இறைப்பணியில்,
திருமதி. தீபா கிறிஸ்தோபர்,
ஆயரம்மா, பெண்கள் ஐக்கிய சங்கத்தலைவி.

# உதவி போதகர் மடல்

## வாக்குத்தத்த செய்தி

**என் சமூகம் உனக்கு முன்பாகச் செல்லும். யாத்திராகமம் 33:14**

புதியதோர் ஆண்டைக் காணச்செய்த தேவனுடைய கிருபைக்காக அவருக்கு ஸ்தோத்திரம். இந்த ஆண்டிற்குள் பிரவேசிக்கும் நமக்குள் அநேக எதிர்பார்ப்புகள் இருக்கலாம், எப்படி இருக்குமோ என்ற பயங்கள் இருக்கலாம், நாம் காத்திருக்கும் நன்மைகள் நடைபெறுமா என்ற ஏக்கங்கள் இருக்கலாம். இப்படி பல காரியங்களால் பரிதபிக்கப்படும் நம் மனதுக்கு தேவன் கொடுக்கும் நம்பிக்கையின் வாக்கு: **"என் சமூகம் உனக்கு முன்பாகச் செல்லும்"** இஸ்ரவேலர்கள் வாழ்வில் அவர்களுக்கு முன் சென்று அவர்களை வழிநடத்தின தேவன் இந்த புத்தாண்டில் நம்மை வழிநடத்தும்படி நம்மோடு வந்து, நம்மை நடத்த போதுமானவராய் இருக்கிறார். முன் செல்லும் தேவன் எப்படிப்பட்டவராக முன் செல்கிறார் என்பதைத் தியானிப்போம்.

### 1.சுமக்கிற தேவன் (Carrying God) உபா.1:31

நம்முடைய தேவன், தகப்பன் பிள்ளையைச் சுமப்பதுபோல நம்மைச் சுமக்கின்றவர். அவர் நம்மைச் சுமப்பதால், நம்முடைய ஞானமோ, பெலமோ, முயற்சியோ, விருப்பமோ நம் வாழ்வில் செயல்படுவதில்லை. இதை நாம் உணரும்போது, அவர் நம்மைச் சுமக்கிற பொறுப்பை ஏற்றுக்கொள்கிறார். அவர் நம்மைச் சுமப்பதால், அவர் சித்தத்திற்கு நடத்தப்படுகிறோம். அவர் கரத்தில் இருக்கிறோம் (யோவான் 10:29 b). அவர் சித்தத்திற்கு நம்மை அர்ப்பணிக்கும்போது, இந்த தேவன் நம்மை பசும்புல் மேய்ச்சலில், அமர்ந்த தண்ணீராகிய சமாதானத் தாபரங்களில் கொண்டுபோய்விடும் பொறுப்புடையவர். அப்படியே இஸ்ரவேலர்களைக் கானான் தேசத்தில், பாலும் தேனும் ஓடும் தேசத்தில் கொண்டு போய்விட்டார். இந்த தேவன் நம்முடைய வாழ்விலும், இந்த ஆண்டிலே, நம்மைச் சுமந்து ஆசீர்வாதமான நிலைகளுக்குக் கொண்டுபோய்விடுவார்.

இந்த ஆசீர்வாமான நிலைக்கு நம்மை அவர் கொண்டுபோக, நாம் என்ன செய்யவேண்டும்? நாம் அவருடைய பிள்ளை என்ற உறவினிமித்தமே அவர் நம்மைச் சுமக்கிறார் என்கிற கிருபையை ஒவ்வொரு நாளும் உணரவேண்டும். அவருக்கும் நமக்கும் உள்ள உறவை குமாரனின் இரத்தம் மூலமாக புதுப்பிக்கும்போது, அவர் நம்மைச் சுமப்பார். கர்த்தருக்கும் நமக்கும் உள்ள உறவைப் புதுப்பிப்போம். கர்த்தரே நம்மை ஒவ்வொரு நாளும் சுமந்துகொண்டு செல்வதை உணருவோம்.

### 2.விசாரிக்கிற தேவன் (Care taking God) 1 பேதுரு 5:7

இந்த ஆண்டு, நம்மை விசாரிக்கும் தேவனாக நம்மோடு வர அவர் சித்தமுள்ளவராய் இருக்கிறார். நம்முடைய கவலையை, கண்ணீரை, அலைச்சல்களை, பாடுகளை விசாரிக்கிறவர் நம் கர்த்தர். ஆகாரை, "எங்கே இருந்து வருகிறாய்" என்று கேட்டார். அவள் குடும்பத்தின் நெருக்கடியான சூழ்நிலையைத் தாக்குப் பிடிக்கமுடியாமல், வனாந்திர வழியில் ஓடிவருகிறாள், வந்த அவளை விசாரித்தார், ஆசீர்வதித்தார். எனவே உங்கள் கவலைகளை எல்லாம் அவர்மேல் வைத்துவிட்டால் அவர் சுமப்பார். அதற்காகவே பிதாவால் இந்த உலகில் அனுப்பப்பட்டார். வருத்தத்தின் பாரத்தைச் சுமப்பவர்களே, என்னிடம் வாருங்கள் என அழைக்கிறார். மத்தேயு 11:28.

மரியாளே, ஏன் அழுகிறாய் என அவளை விசாரித்தார் (யோவான் 20:15a). நான் மரிக்கவில்லை, உயிரோடுதான் இருக்கிறேன் என்று தம்மை வெளிப்படுத்தி, அழுகையை மாற்றினார். நம்மை விசாரிப்பவர் உயிரோடு எழுந்தவர். ஆகவே நம்முடைய காரியங்களை விசாரித்து நமக்கு நீதி செய்வார்.

### 3.புதிதாக்குகிற தேவன்:

புதிதாக்குகிற ஆண்டவர் பழையவைகளை நம்முடைய வாழ்வில் இருந்து நீக்குகிறவர். பழையது எகிப்தின் நிந்தை. அதை இஸ்ரவேலர் வாழ்வில் இல்லாதபடி புரட்டிபோட்டு, கண்ணீரும், கூக்குரலும், அடிமைத்தனமுமான எகிப்தின் வாழ்வை நீக்கி, புதிய விடுதலை உணர்வைச் சுவாசிக்கும் ஒரு பயணத்தையும், அதைத் தொடர்ந்து ஒரு இளைப்பாறுதலின் தேசத்தையும் கொடுத்தார் (யோசுவா 5:9).

பழைய பாவவாழ்வை ஆண்டவர் நினைப்பதில்லை. பழைய வருடத்தின் பாவ வாழ்வை, தேவன் விரும்பாத செயல்களை நினைத்து வருந்தி அறிக்கை செய்து விட்டுவிடும்போது, அதைத் தேவன் நினைப்பதில்லை. புது ஆரம்பத்தை எப்பொழுதுமே நம் வாழ்வில் வாக்குச் செய்கின்றார். பவுலும் தன் அனுபவத்தில் **பழையவைகள் ஒழிந்துபோயின, எல்லாம் புதிதாயின** என்று சொல்லுகிறார் (2 கொரி.5:17).

இந்த புதிய ஆண்டில் எல்லாவற்றையும் நம்முடைய வாழ்வில் தேவன் புதிதாக்கி ஆசீர்வதிப்பாராக.

உங்களுக்காக ஜெபிக்கும்,
அருள்திரு. ஆல்வின் பிரைட்.
உதவி போதகர்.

# உதவி ஆயரம்மா மடல்

இயேசுகிறிஸ்துவின் இனிதான நாமத்தில் உங்களுக்கு என் இனிய புத்தாண்டு நல்வாழ்த்துக்கள்.

## சிந்திக்க ஒரு சிறுகதை

அம்மா புத்தாண்டிற்கென வகைவகையாகப் பலகாரங்கள் செய்து அடுக்குவதை ஜெப்ரின் ஆவலோடு பார்த்துக்கொண்டு இருந்தாள். ஏற்கனவே லட்டுகளைச் செய்து அடுக்கி வைத்திருந்தார்கள். இப்போது அதிரசம் சுட்டுக்கொண்டிருந்தார்கள். அதற்குப்பிறகு அச்சுமுறுக்கு செய்ய வேண்டும். அம்மா! அம்மா! எனக்கு ஒரு அதிரசம் கொடுங்கள் என்று கேட்டாள் ஜெப்ரின். கொஞ்சம் பொறுடி, அண்ணனும் அக்காவும் Youth retreat முடிந்து வரட்டும். பங்குபோட்டுத் தருகிறேன். இதெல்லாம் எண்ணெய்ப் பலகாரங்கள். அதிகமாகச் சாப்பிடக்கூடாது என்று அம்மா கூறினார்கள்.

ஜெப்ரின் 3வது படிக்கும் சிறுபிள்ளை. அம்மா சொன்னதைக் கேட்டு முகத்தை உம்மென்று வைத்துக்கொண்டாள். அதிரசம் செய்து முடித்தவுடன் அம்மா அச்சுமுறுக்கையும் செய்து முடித்தார்கள். பிறகு ஒவ்வொன்றிலும் கொஞ்சத்தை எடுத்து ஒரு பாத்திரத்தில் வைத்தார்கள். மீதி பலகாரங்களைத் தனித்தனியே பாட்டில்களில் போட்டு, அலமாரியில் வரிசையாக அடுக்கி வைத்தார்கள். பலகாரம் வைத்த பாத்திரத்தை எடுத்துக்கொண்ட அம்மா, “இதை கிரேஸ் ஆண்டியிடம் கொடுத்துவிட்டு வருகிறேன். அதற்குள் அண்ணனும், அக்காவும் வந்துவிடுவார்கள். அதுவரை பொறு” என சொல்லிவிட்டு வெளியே சென்றார்கள்.

கிரேஸ் ஆண்டியின் வீடு அடுத்த தெருவில் இருந்தது. எப்படியும் அம்மா திரும்பி வருவதற்குக் கொஞ்சம் நேரம் ஆகிவிடும். ஜெப்ரின் பலகாரங்கள் இருந்த பாட்டில்களைப் பார்த்தாள். அம்மாதான் நிறைய பலகாரங்களைப் போட்டு வைத்திருக்கிறார்களே! அதில் ஒன்று எடுத்தால் அவர்களுக்குத் தெரியவா போகிறது? என்று அவள் நினைத்தாள். ஆனால் ஆண்டவர் எல்லாவற்றையும் பார்த்துக்கொண்டு இருக்கிறார் என்பதை அவள் மறந்துவிட்டாள்! ஒரு ஸ்டூலை எடுத்து அலமாரியின் அருகில் போட்டு அதன்மீது ஏறினாள். லட்டு ஒன்றும் அதிரசம் ஒன்றும் அந்த பாட்டிலில் இருந்து எடுத்துச் சாப்பிட்டாள். அச்சுமுறுக்கைச் சாப்பிட நேரமாகிவிடும் என அவள் அதை எடுக்கவில்லை. இறங்குவதற்குள்ளாக இன்னொரு அதிரசத்தை எடுத்துக்கொண்டாள். ஸ்டூலை எடுத்து அதன் இடத்திலே வைத்துவிட்டு, படிப்பதுபோல் புத்தகத்தை எடுத்துக்கொண்டாள். அவள் அதிரசத்தைச் சாப்பிட்டு முடிப்பதற்கும், அம்மா திரும்பி வருவதற்கும் சரியாக இருந்தது.

அவள் திருதிருவென்று விழிப்பதைக் கண்டவுடன் அம்மா, ஏண்டி ஏதாவது பலகாரத்தை எடுத்தாயா? என கேட்டார்கள். இல்லையேம்மா, நீங்கள் போன நேரத்திலிருந்து நான் பாடம் படித்துக்கொண்டு இருக்கிறேன் எனப் பொய் சொன்னாள். அவ்வேளையில் அருளும், ஜெய்சியும் வந்து விட்டார்கள். அம்மா ஒவ்வொருவருக்கும் 1 லட்டு, 1 அதிரசம், 1 அச்சு முறுக்கு இவைகளை வைத்து காப்பியும் கொடுத்தார்கள். ஜெப்ரின் தன்னுடையதை முதலில் வேகமாகச் சாப்பிட்டுவிட்டு ஆசையோடு பார்ப்பதைக் கண்டவுடன், அருள் தன்னுடைய லட்டையும் அவளுக்குக் கொடுத்துவிட்டான். இப்படியாக ஜெப்ரின் 3 லட்டுகளையும், 3 அதிரசங்களையும், 1 அச்சுமுறுக்கும் சாப்பிட்டுவிட்டாள்.

இரவு சாப்பாட்டு வேளை. ஜெப்ரினுக்கோ கடுமையான வயிற்றுவலி. அம்மா மருந்தைக் கொடுக்க வலி குறைந்தது. ஏண்டி எனக்குத் தெரியாமல் பலகாரங்கள் தின்றாயா? அதிகமாகத் தின்னதினால்தான் வயிற்றுவலி வந்திருக்கிறது என அம்மா திட்டினார்கள். ஜெப்ரின் பொய் சொன்னதை உணர்ந்தாள். அப்பா, **"பொய் உதடுகள் கர்த்தருக்கு அருவருப்பானவைகள், உண்மையாய் நடக்கிறவர்களோ அவருக்குப் பிரியம்"** என நீதி.12:22 வசனம் சொல்கிறது என சுட்டிக்காட்டினார். ஆமாம் அப்பா என்னை மன்னியுங்கள் என்ற ஜெப்ரின் தேவனிடமும் மன்னிப்புக் கேட்டாள்.

**வேதவாசிப்புப் புகுதி :** உண்மை பேசிய மிகாயா 1 இராஜா.22:5-14
**மனப்பாட வசனம் :** சகரியா 8:16

உங்களுக்காக ஜெபிக்கும்
திருமதி.ஜெனி.ஃபர் ஆல்வின்
உதவி ஆயரம்மா.

## வேத வகுப்பு ஆராய்ச்சி

முதலாம், மூன்றாம் மற்றும் ஐந்தாம் புதன் கிழமைகளில் இரவு 8:00 மணிக்கு போதகர் இல்லத்தில் நடைபெறும்

## ஆங்கில ஆராதனை

முதல் மற்றும் மூன்றாம் வாரம் வெள்ளிக்கிழமை தோறும் காலை 6:00 மணி முதல் 7:15 மணி வரை திருவிருந்து ஆராதனை ஆங்கிலத்தில் நடைபெறும்.

# செயலர் மடல்

தமது பெரிதான கிருபையினால் 2016-ம் வருடம் முழுவதும் நம்மைக் கண்மணிபோல் காத்து வழிநடத்திய நமது தேவனுக்கு கோடானுகோடி ஸ்தோத்திரங்களை ஏறெடுக்கிறேன். அதேபோல் 2017-ம் வருடமும் ஆசீர்வாதமான வருடமாக இருக்க கர்த்தரிடத்தில் ஜெபிக்கிறேன்.

02-12-2016 அன்று Bro.Freddy Joseph அவர்கள் ஆராதனையில் பங்கேற்று கர்த்தரின் செய்தியைப் பகிர்ந்துகொண்டதும், 03-12-2016 அன்று Retreat-ல் செய்தியைப் பகிர்ந்து கொண்டதும் மிகவும் ஆசீர்வாதமாக இருந்தது. 03-12-2016 அன்று நமது சபை ஆண்களும், சிறுவர்களும் FootBall Tournament-ல் கலந்து சிறப்பித்தார்கள்.

08-12-2016 அன்று Camp ஊழியத்தின் Carols மிகச்சிறப்பாக நடந்தது. (Shelton Shirt ஸ்தாபனத்தினர் அதில் பங்கேற்ற Camp சகோதரர்களுக்கு Shirt அளித்து சிறப்பித்தார்கள். அவர்களுக்கும், ஆண்கள் ஐக்கிய சங்கத்திற்கும் நன்றியைக் கூறிக்கொள்கிறேன்.

09-12-2016 அன்று நமது ஆலயத்தில் Senior Choir மற்றும் Womens fellowship members நடத்திய Song Service மிகவும் பாராட்டத்தக்கதாக இருந்தது. இதை நடத்த உதவிய Mr.Ranjit Singh, Choir members மற்றும் Womens fellowship பொறுப்பாளர்கள், உறுப்பினர்கள் யாவருக்கும் என் நன்றியையும் பாராட்டுதலையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

09-12-2016 அன்று மாலை ஃபுஜைரா திருச்சபையின் வருடாந்திர அறுப்பின் பண்டிகை வெகுசிறப்பாக நடைபெற்றது. இதற்கு உதவிய Mr.Premline Prince அவர்களுக்கு நன்றி கூறிக்கொள்கிறேன். இதில் Dhs.2,60,000 காணிக்கையாகப் பெறப்பட்டது.

12-12-2016 அன்று நமது ஆலயத்தில் Junior Church Carol Service நடைபெற்றது. இதில் பங்கேற்ற பிள்ளைகளை வாழ்த்துகிறேன். இவர்களைப் பயிற்றுவித்த Mr.Jason Justin மற்றும் Keyboard வாசித்து உதவிய Jehosh Jonah-க்கும் நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். இதற்கு முழு ஆதரவையும் அளித்த பெற்றோர்களுக்கும் நன்றி தெரிவித்துக் கொள்கிறேன்.

16-12-2016 அன்று Indian High School Auditorium-ல் Christmas மரவிழா மிகவும் சிறப்பாக நடைபெற்றது. இதற்கு உதவி பெற்றுத்தந்த Mr.David Thomas Alexander அவர்களுக்கு நன்றிகளைக் கூறிக்கொள்கிறேன். இதில் பங்கேற்ற Junior Church பிள்ளைகள் Youth fellowship members மற்றும் Super senior member யாவருக்கும் நன்றி பாராட்டுகிறேன். இதன் பொறுப்பாளர்கள் அனைவருக்கும் நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். அன்றைய தினம் அன்பின் விருந்து பரிமாறப்பட்டது.

25-12-2016 அன்று அதிகாலை 4:00 மணிக்கு நமது ஆலயத்தில் கிறிஸ்துமஸ் ஆராதனை மிகவும் சிறப்பாக நடைபெற்றது.

நமது முன்னாள் ஆயர் Rev.Jayakumar அவர்கள் மகளின் திருமணத்திற்கு Invitation அனுப்பி இருந்தார்கள். நமது சபையின் சார்பாக Rs.50,000/- திருமணப் பரிசாக அளிக்கப்பட்டது. மேலும் நமது கொளகூர் கிளினிக்கில் Missionary Doctor ஆக பணிபுரியும் Dr.Delightson அவர்களின் திருமணப் பரிசாக Rs.1,00,000 அளிக்கப்பட்டது. 31-12-206 அன்று நள்ளிரவு 11.30 மணிக்கு உடன்படிக்கை ஆராதனையோடு புதுவருட பண்டிகை ஆராதனை வெகுச்சிறப்பாக நடைபெற்றது.

சிங் ரத்னம், செயலர்.

## திருமறைப் பாட ஒழுங்குகள் - ஜனவரி 2017

| நாள் | தியானப் பொருள் | பழைய ஏற்பாடு | நிருப வாக்கியம் | நற்செய்தி பகுதி | சங்கீதம் |
|---|---|---|---|---|---|
| 01-01-2017 வருடத் துவக்கம் | தொடரும் இறை உடன்படிக்கை | ஆதியா. 9:8-17 | கலாத்தியர் 4:21-31 | லூக்கா 2:15-21 | 145 |
| 06-01-2017 | எபிபெனி | ஏசாயா 45:18-25 | வெளிப். 21:22-27 | மத்தேயு 2:1-12 | 67 |
| 13-01-2017 | சரீரம் கடவுளின் ஆலயம் | பிரசங்கி 6:1-12 | 1 கொரிந். 3:16-23 | மத்தேயு 5:21-30 | 1 |
| 20-01-2017 | விசுவாசத்திலும் செயல்பாட்டிலும் ஒருமைப்பாடு | யோசுவா 3:9-17 | அப்போ. 9:20-25 | மாற்கு 1:21-34 | 53 |
| 27-01-2017 | உண்மையான பக்தி | மீகா 6:1-8 | யாக்கோபு 1:19-27 | மத்தேயு 6:1-8 | 42 |

# ஆராதனை பாடல்கள் - ஜனவரி 2017

## பாமாலை - கீர்த்தனை

ஆராதனை ஆரம்ப கவி : பாமாலை 1 கவி 1 அனாதியான கர்த்தரே
ஆராதனை இறுதி கவி : பாமாலை 204 கவி 4 தெய்வ ஆசீர்

### 06-01-2017

| | | |
|---|---|---|
| பாமாலை | 5 | உம்மைத் துதிக்கிறோம் |
| பாமாலை | 181 | விருந்தைச் சேருமேன் |
| கீர்த்தனை | 187 | கர்த்தரின் பந்தியில் வா |
| கீர்த்தனை | 117 | இயேசு என் அஸ்திபாரம் |
| கீர்த்தனை | 126 | நம்பி வந்தேன், மேசியா, நான் |

### 13-01-2017

| | | |
|---|---|---|
| பாமாலை | 130 | நிரப்பும் என்னைத் துதியால் |
| கீர்த்தனை | 111 | பாவியாம் என்னை மேவிப்பார் |
| பாமாலை | 142 | தீயோர் சொல்வதைக் கேளாமல் |
| கீர்த்தனை | 86 | தீயமனதை மாற்ற வாரும் |
| கீர்த்தனை | 87 | சத்திய வேதத்தைத் தினம் தியானி |
| கீர்த்தனை | 92 | உன்றன் சுயமதியே |

### 20-01-2017

| | | |
|---|---|---|
| பாமாலை | 31 | உன்னதமான கர்த்தரே |
| பாமாலை | 116 | கர்த்தர் என் பக்கமாகில் |
| கீர்த்தனை | 115 | விசுவாசத்தால் நீதிமான் பிழைப்பான் |
| கீர்த்தனை | 119 | கிஞ்சிதமும் நெஞ்சே அஞ்சிடாதே |
| கீர்த்தனை | 121 | விசுவாசியின் காதில் பட |

### 27-01-2017

| | | |
|---|---|---|
| பாமாலை | 194 | அருள் ஏராளமாய் பெய்யும் |
| கீர்த்தனை | 110 | பாவியாகவே வாரேன் |
| பாமாலை | 118 | நீரோடையை மான் வாஞ்சித்து |
| கீர்த்தனை | 133 | தெய்வன்பின் வெள்ளமே |
| கீர்த்தனை | 150 | யேசுராசா எனை ஆளும் நேசா |
| கீர்த்தனை | 151 | யேசுவே கிருபாசனப்பதியே |

# புத்தாண்டு 2017

நீதியின் சூரியன்
தேதியைக் குறித்து
சோதியை விரித்து
முத்திரைகுத்திய புத்தாண்டு

இருட்டைச் சுருட்டி
படுக்கைச் சுருட்டாய்
உருட்டிப் போட்டு
பிறந்துவந்த புத்தாண்டு

வல்லதேவன் வலதுகரத்து
நல்லவருடம் நன்மைக்கிரீடம்
செல்லும்பாதை நெய்மழையாய்ப்
பொழிந்துவந்து செழிப்பைத்தருவது

திரும்பிய திசைகளில்
விரும்பிய வளங்கள்
பெருகிய பரவசம்
பரமனைப் போற்றுவோம்

உறவுகள் சிறந்திடும்
உரிமைகள் உறுதிப்படும்
இறையருள் இறங்கிடும்
இணைந்துகை கூப்புவோம்

கலகமிலா உலகநிலை
நிலைத்தலை வேண்டுவோம்
தொலைநோக்கில் நலத்திட்டம்
பலதீட்டி பணிந்திடுவோம்

புத்தாண்டில் நித்தம்மகிழ்ந்து
பொங்கட்டும் உள்ளங்களித்து
இத்தரையினில் அத்தனையும்
அன்பினில்இன்புற வாழ்த்துக்கள் !

ஆதாரம் : சங்கீதம் 65:11, 77:10, 102:27,எபிரெயர் 1:12
கவிதை எண் : 194
கவிதை ஆக்கம் : மணிமுத்து

# நீங்கள் கிறிஸ்தவரா...

அவர் மனப்பூர்வமாய் மனுபுத்திரரைச் சிறுமையாக்கிச் சஞ்சலப்படுத்துகிறதில்லை. புலம்பல் 3:33

ஒரு...
மாவட்டம்
அங்கு சர்வமும்
நிர்வாகம் செய்ய
கலெக்டர் ஒருவரே....
அவருக்குக்கீழ்
வேலை பார்ப்பவர்
அனேகம் பேர்
ஆனால் எல்லோரும்
கலெக்டர்
ஆவார்களா....
மனுக்குலமே
நீ....
தூய்மையான
சுதந்திரமான
என்றுமுள்ள
ஆத்மா,
உனக்கு
வரும் துன்பம்
வேலையிலிருந்து
வருவதில்லை,
பலவற்றின்மீது
பற்றுவைப்பதால்
வருகிறது.
பணம்
மனிதருக்கு கட்டாயம்
வேண்டியதுதான்
கடுமையாக
உழைத்து
ஈட்டவேண்டுமே தவிர
பணமே பிரதானமென
அதன்மீது
பற்று வைக்காதே
கணவன், மனைவி
உறவினர், புகழ்
எதையுமே வாழ்வில்
ஒதுக்கவேண்டாம்
அதனால்
அதில் அளவுகடந்த
பற்றுதல் வேண்டாம்,
பற்றும்
ஆசையும் கொண்ட
மனிதருக்கு
சஞ்சலமும் சிறுமையும்
தானே வருகிறது.
யானை குளித்தபின்
தன் தலையில்
தானே மண்ணை
வாரி பூசும்
அது ஐந்தறிவு ஜீவன்,
ஆறு அறிவு
படைத்த நாம்
கையில் குடையை
வைத்துக்கொண்டு
மழையில்
நனையலாமா..
சளி பிடிக்கும்தானே
சரியாக
நாள் ஆகும்தானே,
கர்த்தரின்
பாதையைவிட்டு
புரளும்போது
கர்த்தரிடம் நமக்கு
இடம் இல்லாது
போகும்போது
அவனவன்
கிரியையினால்
அதனதன் தாக்கத்தால்
சஞ்சலமும்
சிறுமையும் வந்து
சிந்தையைச்
சீர்குலைக்கும்,
இவை
மனுபுத்திரருக்கு
கர்த்தரால்
வருவதல்ல,
யார் யாருக்கு
என்ன கொடுப்பது
எப்போது, எவ்வளவு
கொடுப்பது என்பதை
கர்த்தர் மட்டுமே
அறிவார்.
மனிதரைப்
படைத்த கர்த்தர்
கடைசிவரை
காப்பாற்றுவார்.
"ஆண்டவர்
என்றென்றைக்கும்
கைவிடமாட்டார்"
புலம்பல் 3:31
கர்த்தரிடம்
பித்தனாய் இரு
உன் சிறுமை ஒழியும்
சிந்தை தெளியும்
ஐயா...
நமக்கு ஒரே ஒரு
பற்றுதான்
வேண்டும். அது
இறைவன் இயேசுமீது
மட்டுமே
இயேசுவே சாசுவதம்
இயேசுவே சத்தியம்
நம்புபவன்
வாழ்விலில்லை
பெருந்துன்பம்.
புதுவருடமே வருக!
புதுவாழ்வு தருக!!
இயேசுவின்
ஒளி வருகிறது
இருள் மறைகிறது.

என்றும் அன்புடன், T. ராஜ்குமார். Mens Fellowship.

# மான்

கர்த்தர் படைத்து ஆதாம் பெயரிட்ட விலங்குகளில் பல முற்றிலுமாக உலகை விட்டே மறைந்துவிட்டன. வாய் மொழி தகவல் பரிமாற்றம் இல்லையென்றாலும் மனிதனைப் போன்று வாழ்வதற்கான எல்லா தேவைகளையும் இறைவன் விலங்குகளுக்குக் கொடுத்துள்ளார். வேதத்தில் வரும் பல விலங்குகளின் குணநலன்களை மனிதர்களின் குணநலன்களோடு ஒப்பிட்டுக் காணலாம். விலங்குகளில் மான்கள் அசைபோடுவதோடு, விரிகுளம்புள்ளவைகள். எனவே இறைவன் மான் இனங்களை உண்ணலாமென்று கட்டளையிட்டார். மான் பார்ப்பதற்கு மிகவும் அழகானதும், பார்க்கின்ற எவரும் அவற்றை நேசிக்கின்ற அளவுக்கு மென்மையான பிராணி. காடுகளில் இவை கூட்டம் கூட்டமாக திரியும். மான்கள் வேகமாக ஓடும் என்பதை 2சாமுவேல் 2:18ல் "ஆசகேல் வெளியிலிருக்கிற கலைமான்களில் ஒன்றைப்போல வேகமாய் ஓடுகிறவனாயிருந்தான்" என்று பார்க்கிறோம். தனக்கு ஆபத்து வருவதைத் தெரிந்து கொண்டு வளைந்து வளைந்து ஓடித் தப்புவித்துக் கொள்ளும். சாத்தானுடைய கண்ணிகளில் சிக்கி மாட்டிக் கொள்ளாமல் விழிப்புடன் கண்ணிகளுக்குத் தப்பி ஓட வேண்டும் என்பதை நாம் இவைகளிடமிருந்து கற்றுக்கொள்ள வேண்டும். வாயின் வார்த்தைகளினால் வரும் கண்ணிகளுக்கும் நாம் ஜாக்கிரதையாக இருக்க வேண்டும் என வேதம் எச்சரிக்கிறது. "என் மகனே, நீ உன் சினேகிதனுக்காகப் பிணைப்பட்டு, அந்நியனுக்குக் கையடித்துக் கொடுத்தாயானால், நீ உன் வாய் மொழிகளால் சிக்குண்டாய், உன் வாயின் வார்த்தைகளால் பிடிபட்டாய்... வெளிமான் வேட்டைக்காரன் கைக்கும், குருவி வேடன் கைக்கும் தப்புவதுபோல, நீ உன்னைத் தப்புவித்துக்கொள்" (நீதி.6:1,2,5). மான்களுடைய கால்கள் மெல்லியதாகவும் மிகவும் உறுதியும் வலிமையும் வாய்ந்ததாகவும் இருக்கும். கரடுமுரடான மலைப்பாங்கான பிரதேசங்களில் மிகவும் சாதுர்யமாகவும், வேகமாகவும், குதித்தும் தாண்டியும் ஓடும். ஓடம் போது அவைகள் தலையை கீழ் நோக்கிப் பாராமல் தலையை உயர்த்தி முன்னோக்கிப் பார்த்து உறுதியான நம்பிக்கையோடு ஓடும். தேவன் நான் நம்பியிருக்கிற துருகமும், என் கேடகமும், என் இரட்சணியக் கொம்பும், என் உயர்ந்த அடைக்கலமும், என் புகலிடமும், என் இரட்சகருமானவர் என்ற தாவீதைக் கர்த்தர் அவனுடைய எல்லாச் சத்துருக்களின் கைக்கும், சவுலின் கைக்கும் நீங்கலாக்கி விடுவித்தபோது, அவன் கர்த்தருக்கு முன்பாகப் பாடின பாட்டு: "அவர் என் கால்களை மான்களுடைய கால்களைப் போலாக்கி, என் உயர் தலங்களில் என்னை நிறுத்துகிறார்"(2சாமு. 22:34).

நாமும் கூட கிறிஸ்தவ ஓட்டத்தில் தேவனிடத்தில் உறுதியான நம்பிக்கையோடு முன்னோக்கி அவரையே நோக்கி ஓடும் போது நம்முடைய எல்லாச் சத்துருக்களின் கைக்கும் நீங்கலாக்கி, நம்மை உயர்த்தி ஆசீர்வதிப்பார். மான்கள் அடிக்கடித் தண்ணீர் அதிகமாகக் குடிக்கும். கோடை காலங்களில் வெப்பம் அதிகமாகிவிட்டால் பூமிக்குச் சற்று மேலே நதி நீர் ஓடுவது போல் ஒரு மாயத்தோற்றம் காணப்படும். பாலைவனத்தில் தாகத்தினால் தவிக்கும் மான்கள் அந்த காட்சியைக் கண்டு தண்ணீர் தான் என்று நினைத்து ஓடும். ஆனால் அந்தக் கானல் நீர் விலகி தூரப் போய்க் கொண்டேயிருக்கும். இந்த நிகழ்வினை தான் தாவீது, தேவன் மேல் உள்ள தனது தவிப்பை "மானானது நீரோடைகளை வாஞ்சித்துக் கதறுவதுபோல, தேவனே, என் ஆத்துமா உம்மை வாஞ்சித்துக் கதறுகிறது" (சங். 42:1) என கூறுகிறார். அன்பானவர்களே, நமது தேவன் நம் மேல் வைத்திருக்கும் இரக்கத்திற்கு முடிவே இல்லை. "அவருடைய இரக்கங்கள் மகா பெரியது"(1 நாளா. 21:13). நம்மைத் தேடி வந்த நம் அன்பின் தேவன் விரும்புவதெல்லாம் அனுதினம் நாம் அவரோடு ஐக்கியம் கொள்ள வேண்டும் என்பதே. நம்மோடு அவர் தம்முடைய பாரங்களைப் பகிர்ந்து கொள்ள விரும்புகிறார். என் ஆத்துமா தேவன்மேல், ஜீவனுள்ள தேவன் மேலேயே தாகமாயிருக்கிறது, நான் எப்பொழுது தேவனுடைய சந்நிதியில் வந்து நிற்பேன்? என்ற தாவீது, அதிகாலையில் நான் எழுந்து சத்தமிட்டேன், உம்முடைய வசனத்துக்குக் காத்திருக்கிறேன் என்கிறார். நாமும், அனுதினமும் அதிகாலையில் அவரது பாதத்தில் அமர்ந்து, அவரது அன்பில் மூழ்கி, அவரது வசனத்தைத் தியானித்து, ஜெபத்தில் அவரோடு உறவாடி மகிழும் போது, இந்த புதிய ஆண்டிலும் நம் தேவன் நம் அடைக்கலமாக இருந்து நம்மை ஆசீர்வதித்து வழி நடத்துவாராக.

தேவன் மேல் ஆத்துமாவே தாகமாயிருக்கிறதே
தேவனின் சந்நிதியில் நின்றிட ஆத்துமா வாஞ்சிக்குதே
மான்கள் நீரோடை வாஞ்சித்து கதறும் போல் தேவனே
எந்தன் ஆத்துமா உம்மையே வாஞ்சித்து கதறுதே
தஞ்சமே நீர் அடைக்கலம் நீர் கோட்டையும் நீர் என்றும் காப்பீர்

இனிதா மோசஸ்

## ஆபிரகாம் - ஈசாக்கு!!!

ஆபிரகாமின் கேள்விக்கு பதிலாக ஈசாக்கு தன் தகப்பனாரை நோக்கி "உயிருள்ள ஆண்டவர் மற்றும் தங்கள் ஆத்துமாவுக்கு முன்பாக நான் சொல்கிறேன். தங்கள் வார்த்தைக்கு என்னை வலப்புறமாகிலும் இடப்புறமாகிலும் சிதறச் செய்கிற ஒன்றும் என் இருதயத்தில் இல்லை. என்னுடைய ஒரு உறுப்பாகிலும் உறுப்பின் ஒரு தசையாகிலும் கலங்கவோ அஞ்சவோ இல்லை. என் இருதயத்தில் ஒரு தீய எண்ணமோ சிந்தனையோ இல்லை. மாறாக இந்தக் காரியத்தில் எனக்கு மிகுந்த மகிழ்ச்சியும் சந்தோஷமும் உண்டாயிருக்கிறது. என்னை தகனபலியாக கர்த்தர் தெரிந்து கொண்டதால் நான் பாக்கியம் பெற்றேன்" என்றார். ஈசாக்கின் இவ்வார்த்தைகளைக் கேட்ட ஆபிரகாம், மட்டற்ற மகிழ்ச்சி அடைந்தார். இருவரும் பேசிக்கொண்டே தேவனாகிய கர்த்தர் கூறிய இடத்திற்கு வந்தனர்.

ஆபிரகாம் கண்ணீர் மல்க பலிபீடத்தைக் கட்ட ஆரம்பித்தார். ஈசாக்கு கற்களைப் பொறுக்கிக் கொடுத்து உதவி செய்தார். ஆபிரகாம் கட்டைகளை எடுத்து பலிபீடத்தில் அடுக்கி வைத்தார். பின்பு பலிபீடத்தில் ஈசாக்கை வைக்க அவருடைய கை கால்களைக் கட்டினார். அப்பொழுது அவரிடம், "என்னை நன்றாக கட்டுங்கள். ஏனெனில் நான் பலியிடப்படும்போது சிறிதும் அசைந்துவிடக்கூடாது" என்றார். பின்பு ஈசாக்கு ஆபிரகாமை நோக்கி, என்னை தகனபலியாக தகனித்தபின்பு என்னுடைய சாம்பலை எடுத்து என் தாயாகிய சாராளிடம் கொடுத்து "இது சாராளின் நறுமணம்" என்று கூறுங்கள். ஆனால் அவர் கிணற்றின் மதிலருகிலோ அல்லது உயரமான இடங்களில் இருக்கும்போதோ கூறிவிடாதீர்கள். ஏனெனில் அவர் அதில் சரிந்து விழுந்து மரித்து விடக்கூடும். ஏனென்றால் அவர் ஆத்துமா என்னுடைய ஆத்துமாவோடே இசைந்துள்ளது என்றார். ஆபிரகாம் இவ்வார்த்தைகளைக் கேட்ட போது மிகவும் கலங்கினார். கண்களில் கண்ணீர் வழிந்தோடியது. ஈசாக்கிற்கும் கண்களில் கண்ணீர் மல்கியது. பின்பு ஈசாக்கு ஆபிரகாமை நோக்கி, "தகப்பனே, தாங்கள் கர்த்தருடைய வார்த்தையை விரைவாக நிறைவேற்றுங்கள்" என்றார். ஆபிரகாமின் கண்களும் ஈசாக்கின் கண்களும் கண்ணீரை சொரிந்ததேயன்றி அவர்கள் இருதயமோ களிகூர்ந்தது.

ஆபிரகாம் ஈசாக்கைப் பலிபீடத்தில் கிடத்தினார். ஈசாக்கு ஆபிரகாம் வெட்டுவதற்கு வசதியாக தன்னுடைய கழுத்தை நீட்டி பலிபீடத்தை ஒட்டியபடி படுத்துக்கிடந்தார். ஆபிரகாமோ தன்னுடைய கைகளில் கத்தியை எடுத்து தன்னுடைய மகனை தகனபலியாக பலியிட தயாரானார். அப்பொழுது தூதனானவர் கர்த்தருடைய சமூகத்தில் தோன்றி "ஆண்டவரே நீர் இரக்கமும் மனதுருக்கமும் உடையவராய் வானத்தையும் பூமியையும் உண்டாக்கினீர். ஆபிரகாமின் மேலும் அவர் குமாரனாகிய ஈசாக்கின்மேலும் இரக்கம் காண்பியும். இதுவரையிலும் அவர்கள் உம்முடைய கட்டளையை நிறைவேற்றி வருகிறார்கள். கர்த்தாவே ஆபிரகாம் தன்னுடைய மகனை ஒரு மிருகத்தைப் பலியிடுவது போல கட்டி பலி செலுத்தவுள்ளார். அருள்கூர்ந்து அவர்களின்மேல் உமது இரக்கம் உண்டாவதாக" என்றது.

அந்நேரமே தேவனாகிய கர்த்தர் ஆபிரகாமுக்கு வெளிப்பட்டு "ஆபிரகாமே! பிள்ளையாண்டான்மேல் உன் கையைப் போடாதே! அவனுக்கு ஒன்றும் செய்யாதே! நீ அவனை உன் புத்திரனென்றும் உன் ஏகசுதனென்றும் பாராமல் எனக்காக ஒப்புக்கொடுத்தபடியினால் நீ தேவனுக்கு பயப்படுகிறவன் என்று இப்பொழுது அறிந்திருக்கிறேன்" என்றார்.

ஆபிரகாம் தன் கண்களை ஏறெடுத்துப் பார்க்கும்போது இதோ பின்னாகப் புதரிலே தன் கொம்புகள் சிக்கிக்கொண்டிருந்த ஒரு ஆட்டுக்கடாவைக் கண்டான். அந்த ஆட்டுக்கடா ஆபிரகாமை நோக்கி வர எத்தனித்தது. எப்படியாகிலும் ஈசாக்கை பலிசெலுத்தச் செய்யும்படி சாத்தான் அதை வரவிடாமல் முட்புதரிலே மேலும் சிக்கிக்கொள்ளச் செய்தது.

ஆட்டுக்கடா சாத்தான் கைகளில் சிக்கியிருப்பதைக் கண்ட ஆபிரகாம் சென்று அதைப் பிடித்து பலிபீடத்தின் அருகில் வந்து ஈசாக்கின் கட்டுகளை அவிழ்த்துவிட்டு அந்த ஆட்டுக்கடாவைப் பலியாகச் செலுத்தினார்.

பின்பு ஆபிரகாம் கொஞ்சம் இரத்தத்தை எடுத்து பலிபீடத்தில் தெளித்து "இது என்னுடைய மகனுடைய இரத்தத்திற்குப் பதிலாகச் சிந்தப்பட்டது" என்றார். ஆபிரகாம் அந்த பலிபீடத்தின் பணிமுட்டுகளை எல்லாம் செய்து நிறைவேற்றினபின்பு தேவன் ஆபிரகாமையும் அவரது வித்தையும் ஆசீர்வதித்தார்.

(பின்னர் நடந்ததென்ன?) தொடரும்....

நன்றி: யாசேரின் புத்தகம் தொகுப்பு & தமிழாக்கம்: ஷீபா ரெஜினால்ட்

# திருச்சபை ஜெபநாள் 08-01-2017 (ஞாயிறு)

"கர்த்தாவே, சிறுமைப்பட்டவர்களுடைய வேண்டுதலைக் கேட்டிருக்கிறீர், அவர்கள் இருதயத்தை ஸ்திரப்படுத்துவீர்." சங்கீதம் 10:17

கிறிஸ்துவுக்குள் பிரியமானவர்களே, "திருச்சபை ஜெபநாளில்" பங்கு பெற்றுத் தொடர்ந்து ஜெபித்துவரும் ஒவ்வொரு குடும்ப அங்கத்தினர்களுக்கும், சபையின் சார்பில் நன்றி கூறுகின்றோம். தொடர்ந்து மாதத்தின் முதல் ஞாயிற்றுக்கிழமை தோறும், ஜெபக் குழுக்களிலும், மற்றும் தினந்தோறும் ஜெப நேரம் ஒதுக்கி, ஜெபித்துத் திருச்சபைத் திருப்பணிகளைத் தாங்குங்கள். தேவ ஆசீர்வாதம் உங்களோடிருப்பதாக.

## துதிகள்

- இம்மட்டும் நம்மைப் பாதுகாத்து, பராமரித்து இப்புதிய ஆண்டைக் காணச்செய்த தேவனுக்கு நன்றி ஏறெடுப்போம். கர்த்தர் நமக்குத் தந்தருளிய சரீர சுகம், பெலம், ஜீவனுக்காக அவரைத் துதிப்போம்.
- திருச்சபை மூலமாக நாம் இம்மட்டும் பெற்றுக்கொண்ட ஐக்கியம் மற்றும் ஆன்மீக நன்மைகளுக்காக நன்றி கூறுவோம்.
- தேவன் நம் ஜெபத்தைக் கேட்டு நம் மத்தியில் பிரசன்னராயிருந்து, நம்மைத் தாங்கி பெலப்படுத்தியமைக்காக ஸ்தோத்திரம் கூறுவோம்.
- ஃபுஜைரா கிளைச்சபையின் ஸ்தோத்திரப்பண்டிகை ஆராதனை மற்றும் நமது எல்லா சபைகளின் கிறிஸ்மஸ் பாடல் ஆராதனை, கிறிஸ்மஸ் மரவிழா, கிறிஸ்மஸ், புதுவருட பண்டிகை ஆராதனைகள் யாவும் ஆசீர்வாதமாக நடந்தேற கர்த்தர் பாராட்டின தயவுகளுக்காக அவரைத் துதிப்போம்.

## திருச்சபை திருப்பணிகளுக்கான ஜெப வேண்டுதல்கள்

- நம் குருவானவர்கள், சபை ஊழியர், மற்றும் அவர்களுடைய குடும்பத்தினருக்காக, திருப்பணிகளுக்காக,
- நம் திருச்சபையின் முன்னாள் குருவானவர்கள், அவர்கள் குடும்பத்தாருக்காகவும், ஆரோக்கியத்திற்காகவும்,
- நம் திருச்சபைகளைச் சேர்ந்த திருச்சபையினர் அனைவருக்காகவும், ஆங்காங்கே நடைபெறும் ஆராதனைகள், ஊழியங்கள், சிறுவர், வாலிபர், ஆண்கள், பெண்கள் மத்தியில் நடைபெறும் சிறப்பு ஊழியங்கள் மற்றும் முகாம் ஊழியங்களுக்காக,
- திருச்சபை மக்களுடைய நல்லுறவு பெலப்பட ஏதுவான நம் ஆன்மீக வளர்ச்சிக்காக,
- திருச்சபையின் நிர்வாகக்குழு அங்கத்தினர்களுக்காகவும், தேவ சித்தம் நிறைவேற்றும் வகையில் அவர் தம் பணிகளுக்காகவும்,
- திருச்சபைப் பணிகளை ஜெபத்தோடு உற்சாகமாகவும், உதாரத்துவமாகவும் தாங்கி வரும் திருச்சபை மக்களுக்காக,
- சிறுவர் வேதபாடசாலைத் திருப்பணிகளில் அர்ப்பணிப்போடு பங்கு பெறும் தேவபிள்ளைகளுக்காக, பயன்பெறும் நம் குழந்தைகளின் இறைபக்திக்காக,
- நமது திருச்சபையின் ஜெபக்குழுக்களுக்காக, ஐக்கிய, ஆன்மீக வளர்ச்சிக்காக, மிஷனரி ஊழியங்களுக்காக, தாங்கும் திருச்சபை மக்களுக்காக, மற்றும் மிஷனரி ஸ்தாபனங்களுக்காக

- தென்னிந்தியத் திருச்சபைக்காக, அனைத்துப் பேராயங்கள், நமது பேராயர்கள், குருவானவர்கள், திருப்பணியாளர் அனைவருக்காகவும், திருப்பணிகளுக்காக
- கௌளகூர் மாதிரி கிராமத்தில் அமைத்துள்ள மருத்துவமனை ஊழியங்களுக்காக ஜெபிப்போம்.

## நாட்டுக்காக ஜெப வேண்டுதல்கள்

- இந்திய நாட்டுக்காக, நாட்டின் தலைவர்கள் மற்றும் அதிகாரம் வகிப்போர் அனைவருக்காகவும், தேசத்தின் வளத்துக்காகவும், வளர்ச்சிக்காகவும், மனிதநேயமும், மத நல்லிணக்கமும் பெருகவும் ஜெபிப்போம். நல்ல இயற்கைச் சூழ்நிலைகள், மழை வளத்துக்காக ஜெபிப்போம்.
- அரபு ஐக்கியக் குடியரசுக்காக, அதன் தலைவர்களுக்காக, இங்கு வாழும் அனைத்துமக்களின் சமாதானத்துக்காக,
- உலகத் தலைவர்களுக்காக, சமாதானத்துக்காக, உலகில் தேவ ஆளுகைக்காக

## நமது ஜெப மன்றாட்டுகள்

- இந்த மாதத்தில் தேவ வழிநடத்துதல்கள், தேவ ஆசீர்வாதங்களுக்காக, பாதுகாப்பு, பராமரிப்பு, சுகம், பெலம் ஆகிய தேவ கிருபைக்காக,
- நமது குடும்பங்களின் தேவைகளுக்காக, நமது பிள்ளைகளின் கல்விமுன்னேற்றம், மற்றும் ஆன்மீக வளர்ச்சிக்காக, வளமிகு எதிர் காலத்துக்காக,
- வேலை வாய்ப்புக்காய் காத்திருப்போருக்காக, விசா பிரச்சனைகளில் இருப்போருக்காக, சரீர சுகவீனங்களில் சிகிச்சை பெறுவோருக்காக,
- திருமணத்திற்காக தெய்வ வழிநடத்துதல் நாடுவோருக்காக, குழந்தை பாக்கியத் திற்காக ஜெபிப்போர், மற்றும் பிரசவ கால கட்டத்தில் இருப்போர் அனைவருக்கும் தேவ ஒத்தாசை, கிருபைக்காக, குடும்பங்களை விட்டுத் தனியே பணிக்காக வந்தவர்களுக்காக
- அனைத்து கல்வி, சமுதாய, மருத்துவ ஊழியங்களுக்காய் ஜெபிப்போம்
- நம் வாழ்வின் அனைத்து சூழ்நிலைகளிலும் தேவ ஆளுகை, வல்லமைக்காக, வழிநடத்துதல்களுக்காக,
- பொருளாதார நெருக்கடியினால் வேலையில் ஏற்பட்டுள்ள பிரச்சனைகள் நீங்கவும், பாதிக்கப்பட்ட ஒவ்வொருவருடைய தேவைகள் சந்திக்கப்படவும்,
- குடும்பங்களில், வேலையிடங்களில் மன அழுத்தத்தோடு வாழும் மக்கள் நல்வாழ்வு பெற ஜெபிப்போம்.
- நமது சபையின் இன்பச்சுற்றுலா சிறப்பாக நடந்தேற ஜெபிப்போம்.

"தம்மை நம்புகிற அனைவருக்கும் அவர் கேடகமாயிருக்கிறார்."
சங்கீதம் 18:30

